1968 மார்ச் 2] [திரு. நா. கிருட்டிணன்]

271-வது பிரிவில், மாநில அரசாங்கங்களும் தங்களுக்கு நிதித் தட்டுப்பாடு ஏற்படும் காலங்களில் அத்தகைய சர்ச்சார்ஜ் வசூலிப்பதற்கேற்றவாறு திருத்தம் கொண்டுவர வேண்டும் என்று நம் மாநில அரசு மத்திய அரசுக்கு வற்புறுத்த முன்வருமானால், நாம் அதை வரவேற்க முடியும். பிற பகல் 1–30

மத்திய அரசு வழங்குகின்ற கடன்களுக்கு நாம் வட்டி செலுத்துகின்ற நிலையைப் பார்க்கும்போது வேடிக்கையாக இருக்கிறது. நாட்டிலே பழமொழி கூறுவார்கள். வட்டிக்குக் கடன் வாங்கி, அட்டிகை செய்து, அட்டிகையை விற்று வட்டிக்குக் கட்டினனும் என்பதுபோல், நாம் மத்திய அரசிடமிருந்து வளர்ச்சித் திட்டங்களுக்காகப் பணம்பெற்று, அந்த வளர்ச்சித் திட்டங்களை நடத்துவதன்மூலம் கிடைக்கும் வருவாயை வாங்கி, அவர்கள் தந்த கடனுக்கு வட்டி செலுத்துவதற்கே சரியாக இருக்கிறதே தவிர, அந்த வளர்ச்சித் திட்டங்களால் நாட்டு மக்களுக்கு ஏற்பட வேண்டிய பலனை அனுபவிக்க இயலாத நிலையில் நாம் நிறுத்தப் பட்டிருக்கிறோம். அந்த வகைகளையெல்லாம் பார்க்கும்போதுதான், நம் நிதி நிலையில் தட்டுப்பாடு ஏற்படும்போதெல்லாம் மத்திய அரசைக் குறை கூற வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இந்த நிதி நிலையைப் பார்க்கும்போது, நாம் மத்திய சர்க்காருக்குக் கொடுக்க வேண்டிய கடன் சுமை 1950-ம் ஆண்டில் 14 கோடி ரூபாயாக இருந்தது, இப்பொழுது ஏறத்தாழ வட்டிமட்டும் 15 கோடி ரூபாய் செலுத்த வேண்டிய நிலையில் இருக்கிறோம். 1950-ம் ஆண்டில் கடன் மட்டும் 14 கோடி ரூபாயாக இருந்தது, 1968–69-ல் வட்டியே 15 கோடி ரூபாய் செலுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம். இதையெல்லாம் பார்க்கும்போது, மத்திய அரசாங்கத்திடம் நமக்கு உரிய பங்கைக் கேட்டுப் பெறவேண்டும் என்று வற்புறுத்திக் கூறுவதன் அவசியம் மேலோங்கி நிற்கிறது. இந்த வகையிலே எல்லாம் மத்திய அரசு, மாநில அரசின் வளர்ச்சித் திட்டங்களுக்கு உரிய வகையில் நிதி தர வேண்டும் என்று இந்த நிதி நிலை அறிக்கையில் வற்புறுத்திக் கூறப் பட்டிருப்பதை நான் முழு மனதோடு வரவேற்று, இறுதியாக ஓரிரு வார்த்தைகள் என் தொகுதியைப்பற்றிக் கூற விரும்புகிறேன்.

என் மாவட்டத்தின் வழியாகவும், வடாற்காடு மாவட்டத்தின் வழியாகவும் பாலாறு ஓடிக்கொண்டிருக்கிறது. இந்த நிதி நிலை அறிக்கையில் கூறப்பட்டிருப்பதைப்போல், காவேரி கழிமுகத்தைக் குறித்து ஆராய்ச்சி நடத்துவதைப் போலவே, பாலாற்றைப் பொறுத்தும் ஆராய்ச்சி நடத்த வேண்டும். பாலாற்றுக்கு மற்றொரு பெயர் உண்டு. அதாவது, ரிவர் விதௌட் வாட்டர் என்று புகழ்பெற்ற பெயர் அந்த ஆறுக்கு இருக்கிறது. அதைப் பாலாருகச் செய்யாவிட்டாலும், நீராருகவாவது அதை ஆக்கித் தருமாறு இந்தத் தமிழக அரசை இரண்டு மாவட்டங்களின் சார்பிலும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

எங்கள் ஊரில் இருக்கின்ற மாவட்ட மருத்துவ மனையில், கண், தொண்டை, மூக்கு முதலிய வியாதிகளுக்கு மருத்துவம் செய்கின்ற துறைகள் இன்னும் ஏற்படுத்தப்படவில்லை. அந்த வசதிகளை அங்கே செய்து தருமாறு கேட்டுக்கொண்டு, பேச வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவோடு முடிவுற்று, மீண்டும் 4–3–1968, திங்கட்கிழமை அன்று காலை 9 மணி அளவில் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை ஒத்திவைக்கப்பட்டது. பிற பகல் 1–32

5. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Staturory Rules and Orders.

80. Notification issued with G.O. Ms. No. 1938, Rural Development and Local Administration, dated the 21st October 1967, making an amendment to the Rural Development and Local Adminsitration

Department Notification II-2 No. 329 of 1965, dated the 18th September 1965, published at page 2 of Part II—Section 2 of the *Fort St. George Gazette Extraordinary*, dated the 20th September 1965. [*Laid on the Table of the House under Section* 179 (4) *of the Madras Panchayats Act*, 1958 (*Madras Act* XXXV *of* 1958)].

81. Notification issued with G.O. Ms. No. 2074, Rural Development and Local Administration, dated the 13th November 1967, making an amendment to the Rural Development and Local Adminis tration Department Notification II-2 No. 329 of 1965, dated the 18th September 1965, published at page 2 of Part II—Section 2 of the *Fort St. George Gazette Extraordinary*, dated the 20th September 1965 as subsequently amended. [*Laid on the Table of the House under section* 179(4) *of the Madras Panchayats Act*, 1958 (*Madras Act* XXXV *of* 1958)].

82. Notification issued with Roc. No. 38101/67-F5, dated the 4th November 1967, regarding extension of section 286 and other relevant provisions of the Madras District Municipalities Act, 1920, relating to Vital Statistics to Koothanallur Town Panchayat, Thanjavur district. [*Laid on the table of the House under section* 179(4) *of the Madras Panchayats Act*, 1958 (*Madras Act* XXXV *of* 1958].

83. Notification issued with Roc. No. 57935/67-T, dated the 1st December 1967, in regard to the constitution of Town Panchayat Pannaikkadu, Kodaikanal taluk, Madurai district. [*Laid on the Table of the House under section* 179(4) *of the Madras Panchayats Act*, 1958 (*Madras Act* XXXV *of* 1958)].

B. Reports, Notifications and Other Papers.

Nil.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS